***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 190/2014 – P.W. 5 சுமதி.க/பெ.வாசுதேவன்***

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 06.11.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி...***

***ஏற்கனவே கடந்த 14.11.2022 ஆம் தேதி நான் இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியமளித்துள்ளேன். அப்பொழுது எதிரிகள் ஏலச்சீட்டு நடத்தும்போது என்னிடம் ஒரு ஆவணம் கொடுத்தார்கள். அதனை தாக்கல் செய்வதாக சொல்லி முதல் விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது அந்த ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன்.***

*நான் எடுத்து வந்துள்ள வி.சுமதி , மன்னார்குடி என்ற பெயரில் வி.அம்புலு முத்திரைத்தாள் விற்பனையாளர் அவரிடம் 08.09.2010 ஆம் தேதி வாங்கப்பட்ட 20 ரூபாய்க்கான முத்திரைத்தாள் தாக்கல் செய்கிறேன்.* ***அது அ.சா.ஆ. 4 குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.)*** *இதனை வசந்தாதான் என்னிடம் கொடுத்தார். நான் ஏலச்சீட்டு நடத்தியதற்கு வசந்தாவிடம் 1 லட்சத்து 80 ஆயிரம்* ***பணம் கட்டியிருந்தேன், அதற்கு நம்பிக்கைக்காக பத்திரத்தை கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.***

***எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

1) அசாஆ. 4 ஆவணம் தொடர்பாக போலீசார் விசாரிக்கும்போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தை போலீசார் வாங்கி பார்த்தார்களா ? என்றால் பார்த்தார்கள். வழக்கிற்காக அந்த ஆவணம் தேவைப்படுவதாக சொல்லிவாங்கி வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசாஆ. 4 ஆவணம் எந்த விவரங்களும் பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த ஆவணம் 08.09.2010 ஆம் தேதி வி.சுமதி என்ற பெயரில் வாங்கப்பட்டதாக இருக்கிறது என்றால் சரிதான். அசாஆ. 4 ஆவணத்தை நான்தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான்தான் ஆதார் அடையாள அட்டை கொடுத்துதான் வாங்கினேன். இந்த ஆவணம் பின் யோசனையிட்டு வழக்கிற்காக

என்னால் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சாதாரணமாக சீட்டு போடுவது என்பதற்கும், ஏலச்சீட்டு போடுவதற்கு உள்ள வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.காம் வரை படித்துள்ளேன். நான் எதுவும் வேலை செய்கிறேனா என்றால் வீட்டுக்குடித்தனம்தான். சாதாரணமாக பணம் கொடுத்து வாங்குவதது , சீட்டு நடத்துவது, ஏலச்சீட்டு நடத்துவது போன்ற பண கையாளுகை செய்யவது அரசு அனுமதிபெற்ற பிறகுதான்செய்ய முடியும் என்பது எனக்கு தெரியும். இந்த ஆஜர் எதிரிகள் அவ்வாறாக தொழில் செய்வதற்கு ஏதேனும் உரிமம் வைத்திருந்தார்களா ? என்பது அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வாறாக சீட்டு நடத்துவதோ, ஏலச்சீட்டு நடத்துவதோ இருக்குமாயின் அதற்கு குரூப் என்று பெயர் அந்தகுரூப்பில் குறைந்த பட்சம் 20 நபர்கள் இருக்கவேண்டும் அந்த விவரம் எனக்கு தெரியும். அவ்வாறு நடத்தப்படும் சீட்டில் யார் நடத்துகிறார்களோ அவர்கள் பணத்தை பெற்றுக்கொண்டால் அதற்குண்டான ரசீது அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் பணத்தை பெற்றுக்கொண்டதற்காக அவர்களால் எழுதி தரப்படும் என்றால் சரிதான். நான் அவ்வாறு இருக்கும்வகையில் போலீசார் என்னை விசாரித்தபோது எதிரியால் பணம் பெற்றதாக சொல்லப்படும் வகையில் அதற்குண்டான ஆவணத்தை நான் போலீசாரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆவணம் கொடுத்ததாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசாஆ.4 ல் உள்ள கையெழுத்து 2வது எதிரியுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கே தெரிந்த காரணத்தின் அடிப்படையில் அதில் போட்டோ ஒட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தெரிந்து ஒரு குரூப் நடத்தியதாக தான் எனக்கு தெரியும் . அவ்வாறு இருக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபர்களின் எண்ணிக்கை குறைந்த பட்சமாக 16 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னபடி எதிரிகளிடம் ஏலச்சீட்டு போட்டதாக சொல்வதும் , அவர்கள் பணம் கொடுப்பதாக சொல்வதும் வழக்கிற்காக சொல்கிறேன் என்றும், முதல் விசாரணையில் சொன்னதுபோல் அவர்கள் எந்த ஒரு சீட்டும் நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல .

நீதிமன்ற கேள்வி - அசாஆ. 4 ஆவணத்தை எதிரி கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் நீங்கள் முத்திரைத்தாள் வாங்கியதாக எவ்வாறு கூறமுடியும் ?

பதில் - நான் வாங்கிய முத்திரைத்தாளில் எனக்கு 2ம் எதிரி ஏலச்சீட்டு நடத்திய வகையில் பணம் தரவேண்டியிருந்தால் அதற்காக முத்திரைத்தாளில் ஸ்டாம்ப் ஒட்டி , அவரின்போட்டோவையும் ஒட்டி கையெழுத்து செய்து கொடுத்தார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

அசாஆ. 4 ஆவணத்தை எதிரி கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றும், உண்மையில் அவ்வாறு கொடுத்திருந்தால் அதனை போலீசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு பணம் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. அசாஆ. 4 சிருஸ்டை செய்யப்பட்டுள்ளதால்தான் வழக்கில் சொல்லப்பட்டுள்ள வரவு செலவு காலக்கட்டத்திற்கும் என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.